# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


**ஆணை நாள். 12.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12934/F/2024**

திரு.ப.மூர்த்தி, -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.ப.மூர்த்தி, அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.அ.பிரியஸ்ரீ, திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காந்திமாநகர், கணபதி, கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 05.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "11.06.2024 நாளிட்ட ஆட்சேபனை கடிதம் உறுப்பினர் செயலர்/ இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட நாள் குறித்த விவரங்கள்" என்பன போன்ற தகவல்களை 10 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ திட்ட உதவியாளர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-641 004 அவர்கள் ந.க.எண்.290/2024, நாள் 06.08.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 10.08.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவைப் பெற்ற மேல்முறையீட்டு அலுவலர்/ இணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004 அவர்கள் ந.க.எண்.290/2024, நாள் 27.09.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக் தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 04.10.2024 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.290/2024, நாள் 06.08.2024 மற்றும் ந.க.எண்.544/2025/கோமா/தஅஉச, நாள் 10.12.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.290/2024, நாள் 27.09.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 7-க்கு முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு இனம் 7-க்கு உரிய தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 05.07.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 7-க்கு உரிய / சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய முறையில் சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு, அது குறித்த அறிக்கையினையும் Tracking Consignment-யும் இணைத்து 17.06.2026 அன்று**

**ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 12934/F/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

**மனுதாரர்**

திரு.பி.மூர்த்தி,
1-88 தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி போஸ்ட்,
சோமனூர் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-641 668.

Copy to: File NS/PA-